# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## <u>அசல் வழக்கு எண். 51/2014</u>

சாட்சி : PW–1

பெயர் : திருமதி. சாந்தி                                        தேதி : 14.11.2022

**<u>குறுக்குவிசாரணை</u>** :–(1–ம் பிரதிவாதி தரப்பில்)

நான் +2 படித்துள்ளேன். 1–ம் வாதி உஷாராணியின் கணவர் பெயர் ஞானவேல். வ.சா.1 கிரய ஒப்பந்தப்பத்திரத்தில் 3 ம் தரப்பினராக குறிப்பிடப்பட்டுள்ளவர் 3 ம் வாதி. நானும், 1,3 வாதிகளும் நாளது தேதிவரை சுமூகமான உறவில் உள்ளோம். இதே நீதிமன்றத்தில் நான் இந்த வழக்கில் ஒரு தலைபட்ச உத்தரவு பிறப்பித்ததின் அடிப்படையில் E.P.No.61/2018 தாக்கல் செய்திருந்தேன். மேற்படி நிறைவேற்றுதல் மனு நிலுவையில் இருந்தபோது 2–ம் பிரதிவாதி ராமசாமி இறந்துவிட்டார். நான் இந்த வழக்கு வாய்தாவிற்கு நீதிமன்றத்திற்கு வரும்போது தனியாகவும் வருவேன், என் கணவருடனும் வருவேன். 1ம் வாதி உஷாராணியும், அவராகவும் கணவருடனும் வந்திருப்பார்கள். இன்று என் கணவர் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். வ.சா.1 கிரய ஒப்பந்தப்பத்திரம் 27.02.2011 தேதி எழுதப்பட்டது. வ.சா.1 கிரய ஒப்பந்தப்பத்திரத்தில் கண்டுள்ள சொத்தின் விஸ்தீரணம் சுமார் 1 ஏக்கர். வ.சா.1 கிரய ஒப்பந்த பத்திரத்தில் கிரயம் செய்ய 5 மாத காலம் அவகாசம் வழங்கப்பட்டது. ஒரு சதுர அடிக்கு ரூ.350/– வீதம் ஒரு ஏக்கருக்கு ரூ.1,52,46,000/–. வ.சா.1 கிரய ஒப்பந்தபத்திரம் ஏற்படுத்தப்பட்ட தேதியில் நாங்கள் பிரதிவாதிகளுக்கு ரூ.50,00,000/– முன்பணமாக கொடுத்தோம். சாட்சி தற்பொழுது கிரய ஒப்பந்த தேதியன்று ரூ.40,00,000/– முன்பணம் கொடுத்ததாகவும், 06.03.2011 அன்று ரூ.10,00,000/– கொடுத்ததாகவும் கூறுகிறார். கிரய ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்ட தேதியிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவான 5 மாதத்திற்குள் மேற்படி 2 தவணையாக ரூ.50,00,000/– கொடுத்ததுபோக நாங்கள் பிரதிவாதிகளுகக்கு வேறு தொகை எதுவும் கொடுக்கவில்லை. மேற்படி 5 மாத காலத்திற்குள் நாங்கள்

கிரையம் செய்து கொள்ள தயாராக இருக்கிறோம் என்று கூறி வழக்குரைஞர் மூலம் பிரதிவாதிகளுகக்கு அறிவிப்பு அனுப்பவில்லை. மீதி கிரைய தொகை எங்கள் கைவசம் இருந்தது என்பதை காட்டும் ஆவணம் எதையும் நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. மீதி கிரைய தொகை எங்கள் கைவசம் இல்லை என்பதால் தான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றும், அதனால் வ.சா.1 ஆவணத்தை அனுசரித்து கிரையம் செய்து கொள்ளவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி முன்பணம் ரூ.50,00,000/–ல் பிரதிவாதிகள் எங்களுக்கு 08.08.2012 தேதி ரூ.15,00,000/–, 08.09.2012 தேதி ரூ.12,00,000/–, 29.10.2012 தேதி ரூ. 10,00,000/– ஆக ரூ.35,00,000/– திருப்பி கொடுத்துவிட்டனர். மேற்படி ரூ.15,00,000/– ஐ வசூல் செய்து தர சொல்லி சேலம் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகதில் பிரதிவாதிகள் பெயரில் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். மேற்படி புகார் நில அபகரிப்பு பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி புகாரின் நகல் தான் என்னிடம் காட்டப்படுவது அது **EX.B.1.** மேற்படி புகாரை நானும், மற்ற வாதிகளும் எங்கள் கணவர்களுடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு சென்றிருந்தோம். எங்களுக்கும் பிரதிவாதிகளுககும் காவல்நிலையத்திலிருநது அழைப்பாணை வந்திருந்தது. மேற்படி காவல்நிலைய விசாரணைக்கு நாங்கள் சுமார் 6 முறை காவல்நிலையத்திற்கு சென்றோம் என்றால் சென்றோம். 1ம் பிரதிவாதி வரவில்லை. மேற்படி ஆவணத்தில் உள்ள 2வது கையொப்பம் என் கணவருடையது. அது **EX.B.2.** என்னிடம் காட்டப்படும் petition disposal slip ல் 2 வதாக என் கணவர் கையொப்பம் இட்டுள்ளார். மேற்படி petition disposal slip **EX.B.3.** என்னிடம் காட்டப்படும் மற்றொரு ஆவணத்தில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது. மேற்படி ஆவணம் **EX.B.4.** **EX.B.4** ஆவணம் 09.07.2013ம் தேதி எழுதப்பட்டது என்றால் சரிதான். மேற்படி **EX.B.4** ஆவணத்தில் ரூ.45,00,000/– நாங்கள் பெற்றுக்கொண்டதாகவும், 10.07.2013 தேதி ரூ.5,00,000/– கொடுத்து

செல்லாகிவிடவேண்டியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. **EX.B.2** நாங்கள் முக்கிய நபர்கள் மூலமாக எங்கள் பிரச்சனைகளை பேசி தீர்த்து கொண்டோம் என்று எழுதி என் கணவர் கையொப்பம் இட்டுள்ளார் என்றால் சரியல்ல. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நாங்கள் கொடுத்த புகாரின் பேரில் எவ்வித முடிவும் எட்டப்படவில்லை. 1-ம் பிரதிவாதி வரவில்லை. விசாரணையில் முழுமையாக பிரதிவாதிகள் கலந்து கொண்டனர் என்றும், அவற்றில் பிரதிவாதிகள் கையொப்பம் இட்டுள்ளனர் என்று சொன்னால் சரியல்ல. நில அபகரிப்பு பிரிவில் நடந்த விசாரணையில் எங்களுக்கு மீதி ரூ.15,00,000/- செல்லாகிவிட்டது என்றால் சரியல்ல. **EX.B.1** புகாரில் பிரதிவாதிகள் எனக்கு ரூ.8,00,000/- தரவேண்டும் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் எங்களுக்கு ரூ.8,00,000/- தரவேண்டும் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Sd./-S. Jeganathan,
I Additional District Judge,
Salem.